தி இந்து 23/01/2019

இந்து தமிழ் திசை



▲ அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி மகளிர் நிறுவனத்தின் பொறியியல் புலம் மற்றும் 'இந்து தமிழ் திசை' சார்பில் நடைபெற்ற அறிவியல், தொழில்நுட்பப் போட்டிகளில் வென்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசு வழங்கிய பொறியியல் புல இயக்குநர் கே.என்.ராஜாராவ், முதன்மையலர் எஸ்.மரகதம், எஸ்.மலர்விழி உள்ளிட்டோர்.

படம் : ஜெ.மனோகரன்.

## 'இந்து தமிழ் திசை', அவினாசிலிங்கம் கல்வி நிறுவனம் சார்பில்

# பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் தொழில்நுட்ப போட்டிகள்

**கோவை**

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர் கல்வி மகளிர் நிறுவனத்தின் பொறியியல் புலம் மற்றும் 'இந்து தமிழ் திசை' சார்பில் 'சயின்ஸ் டெக்னோ ஃபேர் 2020' என்ற அறிவியல் தொழில் நுட்ப போட்டிகள் மற்றும் கண்காட்சி நேற்று நடைபெற்றது.

கோவை பன்னமடை வரப்பாளையத்தில் உள்ள கல்வி நிறுவன வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 19 பள்ளிகளில், 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் 300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஓவியம், பொது அறிவு விநாடி-வினா மற்றும் அறிவியல் மாதிரிகள் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களில் வென்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழாவில், அவினாசிலிங்கம் பொறியியல் புல இயக்குநர் கே.என். ராஜாராவ், முதன்மையர் எஸ்.மரகதம், எஸ்.என்.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் கே.பிரேம்நசீர், குவிஸ் மாஸ்டர் எம்.ரங்கராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அறிவியல் மற்றும் மானுடவியல் துறைத் தலைவர் எஸ்.மலர்விழி நன்றி கூறினார்.

இப்போட்டிகளில் சின்மயா சர்வதேச உறைவிடப் பள்ளி, ஜிகேடி மெட்ரிக். பள்ளி, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, ரீட்ஸ் வேர்ல்டு பள்ளி, அசோகபுரம் அரசுப் பள்ளி, விக்னேஷ்வரா வித்யாலயா பள்ளி, தி யுனைடெட் பப்ளிக் பள்ளி, டி.என்.ஜி.ஆர். மெட்ரிக். பள்ளி உள்ளிட்ட ஏராளமான பள்ளி மாணவ, மாணவிகள் போட்டிகளில் வென்றனர்.

விநாடி-வினா போட்டியில் கே.யோஹன்-மோக்சித் கோத்தாரி, அனுவர்ஷினி சிவக்குமார்-பவதாரணி, ஆர்.ஜே.தருண்-பி.அஸ்வத் ஆகியோரும், ஓவியப் போட்டியில் பி.சுஜித், கே.எம்.ஸ்ருதி, ஜி.நிவேதா ஆகியோரும், அறிவியல் மாதிரி போட்டியில் ஏ.எஸ்.தக்சனா-வி.தாரிணி, ஏ.ரூபா-எஸ்.ஷிவானி, ஜி.விக்னேஷ் ஆகியோரும் முதல் 3 இடங்களை வென்றனர்.